# Humane Animal Society

**No.35 Co-operative Colony, Perks Arch Road**
**Uppilipalayam, Coimbatore 641 015**
**Phone: 93661 27215, 93671 44147 Help Line: 97915 32266**
**Email: has.cbe@gmail.com Website: www.hasindia.org**
**Like our Page: www.facebook.com/has.cbe**
**Join our Group: www.facebook.com/groups/has.cbe**


ராபீஸ் அல்லது ராபீஸ் நுண்ணுயிரி

1. எது உண்மை? எது பொய்? இதை நீங்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்?
ஒரு தெரியாத விஷயத்திற்கு மனிதன் பயந்து கொள்கிறான். அறியாமையாலும் நோய் குறித்த உண்மையான தகவல் இல்லாத காரணத்தினாலும், மூடநம்பிக்கையாலும், அறிவுக்கு பொருந்தாத பயமாக அது பதிந்து விட்டது. அதன் காரணமாக பல்வேறு அவல மரணங்கள் ஏற்பட்டு விட்டன. மக்களிடையே ராபீஸ் குறித்த சில உண்மை தகவல்களையும், விழிப்புணர்வு உண்டாக்கும் முயற்சியை செய்கிறார்கள் இந்த அமைப்பினர்.

2. ராபீஸ் என்றால் என்ன? இது ஒரு வைரஸ் நோய். உடம்பில் எந்த பகுதியை பாதிக்கிறது?
இந்த வைரஸ் உடம்பில் உள்ள மைய நரம்பு மண்டலத்தை தாக்குகிறது. மேலும் மூளையை பாதித்து மரணத்தை உண்டாக்குகிறது.

3. எப்படி ராபீஸ் நோய் பரவுகிறது?
நோய் கிருமி பாதிக்கப்பட்ட விலங்கு மற்ற விலங்கு அல்லது மனிதனை கடித்தாலோ அல்லது பாதிக்கப்பட்ட விலங்கின் எச்சில் மற்ற விலங்கின் காயங்கள் மீது நக்கினாலும் சிதைவுற்ற அந்த புண் வழியாக எளிதாக பரவி விடுகிறது. இது காற்றின் வழியாக பரவக்கூடிய நோய் இல்லை. ஆனால், நாய்களும் மனிதர்களும் நோய் பரவுவதற்க்கு முக்கிய காரணமாக உள்ளனர்.

4. ராபீஸ் நோய் வராமலும் பரவாமலும் எவ்வாறு தடுக்கலாம்?
நோயின் அறிகுறி வந்த பின்னர் நோய்க்கு மருந்து இல்லை என்பது வருதத்திக்குரியது. ஆனால், நாயோ பூனையோ கடித்த உடன் 24 மணிக்குள் (24 Hours) மருத்துவரின் அறிவுரைப்படி தடுப்போசி போட்டு கொள்ள வேண்டும்.

5. இதன் அறிகுறிகள்தான் என்ன? என்ற கேள்வி மனதில் ஏற்படலாம்?
முதலில் தெளிவற்ற, குறிப்பிடாத அறிகுறிகள் என்னெவென்றால் காய்ச்சல், வாந்தி அல்லது வலி ஏற்படும். ராபீஸ் இரண்டு வகைகள் உண்டு. 1. ஆக்ரோச ராபீஸ் (Ferocious ராபீஸ்) 2. ஊமை ராபீஸ் (Dumb ராபீஸ்)

**i. ஆக்ரோச ராபீஸ் (Ferocious Rabies)** அமைதியின்மை, இயல்பற்ற நடத்தை, தளர்ச்சி, முடக்கு நோய் (பாரலிசிஸ்) ஆகியவை ஏற்படலாம்.நாய்களைப்போல் உணர்ச்சி வசபடுவார்கள். எதை கண்டாலும் கடிக்கும் குணம் ஏற்படும்.

ii. ஊமை ராபீஸ் ( Dumb Rabies)
இருட்டில் சென்று ஒளிந்து கொள்வார்கள். குரல் மாற்றம், விழுங்க முடியாதது போன்ற அறிகுறிகள் இறுதி கட்டமாக முடக்கு நோய் (Paralysis). காரணமாக சுவாச குழாய் செயலற்று மயக்க நிலையை அடைந்து இறந்து போவார்கள்.

6. மேலே குறிப்பிடப்பட்ட அறிகுறிகளை காட்டும் எல்ல நாய்களுக்கும் ராபீஸ் உண்டா?
அவசியமில்லை. ஆனால் அறிகுறிகள் காட்டினாலும் உறுதியாக ராபீஸ் வருவதற்கு வாய்ப்பு உண்டு.எப்படி ஆனாலும் நரம்பு சார்ந்த நோய்கள் அல்லது குறைபாடுகள் இருந்தால் அறிகுறிகள் காட்ட வாய்ப்புகள் உண்டு. எச்சி சுரத்தல் ஏற்படுவதற்கு காரணம் என்னவென்றால் வாயில் புண் அல்லது நஞ்சு பொருட்கள் சாப்பிட்டால் ஏற்படும். பொதுவாகவே துண்டுதலினால் நாய்கள் குரைப்பது இயல்பு. ஆனால், மக்கள் அதை வெறி பிடித்த நடத்தை என்று தவறாக நினைக்கிறார்கள்.

7. எப்படி ராபீஸ் நோயை கண்டறியலாம்?
மருத்துவம் அல்லது பரிசோதனை கூடம் மூலமாக அறியலாம். மருத்துவர் நோய் இருக்கின்றதா என்பதை அறிய நாயை தனிமைபடுத்தி வைப்பார். இதற்கும் மேலாக நாய் இறந்த பின் அதனுடைய மூளை திசு பரிசோதனை கூடத்தில் செய்யப்படும். ரத்த பரிசோதனை மூலமாக நோயை கண்டறிய முடியாது.

8. இது உண்மையா வெறி பிடித்த நாய்கள்தண்ணியை பார்த்தால் ஆக்ரோசமாக நடந்து கொள்கிறார்கள்.
கிடையாது. அதிக சந்தர்பங்களில் தசை நடுக்கத்தினால் தண்ணீர் பருக முடியாமல், முடக்கு நோய் தசையினால் விழுங்க முடியாது. எச்சில் சுரக்கும் போது நாய்களினால் எச்சில் விழுங்க முடியாது.

9. எல்லா தெரு நாய்களுக்கும் ராபீஸ் உண்டா?
இல்லை. நாய்களுக்கு நோய்தடுப்பூசி போடாத பட்சத்தில், நாய் கடி பட்டபின் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு.

10. வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு ராபீஸ் வரலாமா? நாய்களுக்கு நோய் தடுப்பூசி அவசியமா?
ஆம்! மிகவும் அவசியம். வீட்டில் வளர்க்கும் நாய்கள் வீதியில் உலா வரும் பொழுது தெருவில் உள்ள மற்ற ராபீஸ் நோயினால் பாதிக்கப்பட்ட (Rabid animal) விலங்கிடமிருந்து கடி பட்டு நோய் பரவுகிறது பின்னர், அந்த செல்ல பிராணி அந்த வீட்டு நபரை கடிக்கும் பொழுது அந்த நபருக்கு பரவுகிறது.

11. பூனையை செல்ல பிராணியாக வளர்ப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்?
நாயனாலும் சரி? பூனை ஆனாலும் சரி? நோய் தடுப்பூசி மிக மிக அவசியம். ஆண்டுக்கு ஒரு முறை தடுப்பூசி போட்டால் போதும்.

12. ஏதேனும் விலங்கு என்னை கடித்து விட்டால் அல்லது நக்கி விட்டால் அந்த விலங்குக்கு ராபிஸ் இருக்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டால் நான் என்ன செய்வது?
வீட்டில் வளர்க்கும் நாய், தெரு நாய் இவற்றில் எவை கடித்தாலும், உடனடியாக கடிபட்ட இடத்தினை சலவை சோப்பு கொண்டு கடி பட்ட இடத்தினை நன்றாக கழுவ வேண்டும். தொடர்ந்து உடனடியாக அருகில் உள்ள மருத்துவரை அணுகி, வெறிநோய்க்கான உரிய தடுப்பூசி போட்டு கொள்வதன் மூலம் ராபீஸ் எனும் வெறிநோயிலிருந்து நம்மை முற்றிலும் காத்து கொள்ளலாம். பொதுவாக நாய் கடிபட்ட நாளிலிருந்து 0,3,7,14,28 நாட்களில் தடுப்பூசி போடப்படுகிறது.

14. பிறக்கும் குட்டிக்கு தாய் வழியாக ராபீஸ் நோய் பரவுமா? அல்லது குட்டி குடிக்கும் தாய்பால் வழியாக ராபீஸ் பரவுமா?
நாய் குட்டிக்கு பிறப்பினால் ராபீஸ் இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால், பாதிக்கப்பட்ட தாய் இடமிருந்து பாலை பருகும் பொழுது வெறிநோய் கிருமிகள் குட்டிக்கு பரவலாம். தாய் குட்டியை நக்கினாலோ அல்லது கடித்தாலோ அது பிறந்த குட்டிக்கு மிக பெரிய இடையூறு ஏற்படலாம்.

15. வெறி பிடித்த விலங்கு என்னை கடித்து விட்டால் எனக்கு கண்டிப்பாக ராபீஸ் வர வாய்ப்பு உண்டா?
கிடையாது. மனிதர்க்கு ராபீஸ் நோய் வருவதற்க்கு வாய்ப்பு மிக மிக குறைவு. மக்களுக்கு சிகிச்சை எடுத்த பிறகு ராபீஸ் நோய் அவர்களை தாக்கவில்லை என்பதை புள்ளி விபரம் மூலம் அறியலாம். என்னவாக இருந்தாலும் அனைவரும் கடித்த பிறகு தடுப்பூசி போடுவது மிக மிக அவசியம். யாரும் அலட்சியமாக இருக்க வேண்டாம்.

16. இந்தியாவில் ராபீஸ் நோய் தாக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?
வருடத்திக்கு சுமார் 25,000 முதல் 30,000 வரை இறந்துள்ளனர். வரும் முன் காப்போம்,நோய் தடுப்பு முறை, ஆகியவை செயல் முறை படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் 2001ல் ராபீஸ்ஆல் ஏற்படும் மரணம் குறைந்துள்ளது.

17. நான் வெறி பிடித்த தெரு நாயை பார்த்தால் என்ன செய்ய வேண்டும்?
உடனடியாக அருகில் உள்ள மிருக நல அமைப்புக்கு தெரிவிக்க வேண்டும். அந்த நாயை எடுத்து சென்று பரிசோதனை செய்ய சொல்லுங்கள் .தயவு செய்து கொல்லவோ தொடவோ செய்யாதீர்கள்.

நன்றி

In Association With